Registered as a Newspaper பக்கங்கள்: 4 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆடி 28 | 13-08-94 | சனிக்கிழமை | ஓசை 170

## யாழ். மாவட்டத்தில் 3 மாதங்களில் 12,527 பேருக்கு மலேரியா

யாழ். மாவட்டத்தில், இவ்வருடத்தின் இரண்டாம் காலாண்டில் மலேரியாவின் தாக்கம் சற்றுக் குறைந்து காணப்படுவதாக, பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவு மேற்கொண்ட புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவருகிறது. இதன்படி, பன்னிரண்டாயிரத்து ஐந்நூற்று இருபத்தேழு மலேரியா நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர். இவர்களில் ஆயிரத்து இருநூற்று அறுபத்தியொன்பது நோயாளர்கள் மூளை மலேரியாவினால் பாதிக்கப்பட்டிருந்தனர் எனத் தெரியவருகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு - கட்டு முறிப்புக் குளம்

# ராணுவமுகாம்மீதுபுலிகள்தாக்குதல்; 11 படையினர் பலி; பலர் படுகாயம்

## முகாமைக் காக்க இருமணி நேரம் கடும் மோதல்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்டுமுறிப்புக்குளம் இராணுவ முகாம் மீது நேற்று முன்தினம் அதிகாலை விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர். சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்ற உக்கிரமான இம்மோதலின் போது பதினொரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பத்திற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேசமயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் திருகோணமடு, கதிரவெளி படை முகாம்கள் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தியதாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தாக்குதல் குறித்து சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்கா மேலும், தகவல் தருகையில், புலிகளின் தாக்குதல் மிகக் கடுமையாக இருந்ததாகவும் ஆரம்பத்தில் படையினர் பின்வாங்க வேண்டி ஏற்பட்டதாகவும், பின்னர் முகாமை கைப்பற்றுவதற்காக இராணுவம் பலத்த தாக்குதல் நடத்த வேண்டி இருந்தது எனவும் தெரிவித்தார்.

இத்தாக்குதல் நடத்தப்பட்ட போது சுமார் 200 இராணுவத்தினர் முகாமில் இருந்ததாக இராணுவத் தரப்புச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. பொதுத் தேர்தல் செவ்வாயன்று நடைபெற இருக்கும் நேரத்தில் தேர்தலைக் குழப்பக்கூடிய வகையில் மேலும் பலதாக்குதல்கள் நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் பிரிகேடியர் கெமுனு குலதுங்கா மேலும் தெரிவித்தார்.

## மன்னார் நகரத்தில் அதிரடி

## சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

வீட்டினுள் உறங்கிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவர் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை மூளாயில் நடந்தது. இதன் போது நாகேந்திரம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று மூடப்பட்டிருக்கும்

தவிர்க்க முடியாத காரணத்தினால் கோண்டாவிலில் அமைந்துள்ள அனுமதிக்கான விசாரணைச் செயலகம் இன்று திறக்கப்படமாட்டாது என்பதை பொதுமக்களின் கவனத்துக்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத்தருகின்றனர்.

## சந்நிதி, துர்க்கையம்மன் ஆலய உற்சவங்களை நிறுத்த உத்தரவு

### சிறிலங்கா பாதுகாப்புப் படை விதித்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இரு பிரசித்திபெற்ற ஆலயங்களின் உற்சவங்களை உடனடியாக நிறுத்துமாறு சிறிலங்கா பாதுகாப்பு நடவடிக்கை தலைமை அலுவலகத்தில் இருந்து அறிவித்தல் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தற்போது உற்சவம் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயம், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம் என்பனவற்றின் உற்சவங்களையே உடனடியாக நிறுத்துமாறு பாதுகாப்பு நடவடிக்கை தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த கேணல் உடுகம இவ் அறிவித்தலை அனுப்பி வைத்துள்ளார்.

இதே வேளை இவ் இரு ஆலயங்களின் உற்சவங்கள் மீது விதிக்கப்பட்ட தடையினைத் தளர்த்துமாறு ஆலய நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரியவருகின்றது. (நி, பா)

## 94-ஆண்டுவாகனவரிஅட்டை 20-ம்திகதிக்குமுன்பெறவும்

யாழ். மாவட்டத்தில் உள்ள மோட்டார் ஊர்திகளுக்கான 94-ம் ஆண்டுக்குரிய வரி அட்டை அந்தந்தப் பகுதி உதவி அரச அதிபர் பிரிவு அலுவலகங்களில் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை 94-ம் ஆண்டு வரி அட்டையைப் பெற்றுக் கொள்ளாத ஊர்தி உரிமை

## இனமதெரியாத

இன்றன. பொதுத் தேர்தல் மேலும் தெரிவித்தார்.

94-ம் ஆண்டுக்குரிய வரி அட்டை அந்தந்தப் பகுதி உதவி அரச அதிபர் பிரிவுகளில் விசேடமாக இயங்கும் இதுவரை 94-ம் ஆண்டு வரி அட்டையைப் பெற்றுக் கொள்ளாத ஊர்தி உரிமை

(4 ஆம் பக்கம் பார்க்க

# புலிகளின் கொமாண்டோ பிரிவின் தாக்குதலுக்கு 10 பொலிஸார் பலி

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தின் பூரண கட்டுப்பாடடுப் பிரதேசம் எனக் குறிப்பிடப்படும் மன்னார் தீவினுள், மன்னார் நகரை அண்டிய பகுதியில் உள்ள பொலிஸ் நிலையப் மீது விடுதலைப் புலிகளின் கொமாண்டோ அணியினர் திடீர்த் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இத் தாக்குதலின் போது இரண்டு அதிகாரிகள் உட்பட 10 பொலிசார் கொல்லப்பட்டனர். 11 பேர் படுகாயமடைந்தனர். ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர். பொலிஸ்நிலையம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டது.

கடந்த மாதம் 12-ம் திகதி சிலாவத்துறையில் உலங்கு வ னூர்தி மூலம் இராணுவத்தினர் தரையிறக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் முகாம் மீது தாக்குதல் மேற்கொண்டதற்குப் பதிலடி கொடுக்கும் முகமாக இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

மன்னார் தீவிலுள்ள மன்னார் பட்டினத்திலிருந்து ஆயிரம் யார் தூரத்தில் மன்னார் பிரதான வீதியில் அமைந்திருந்த பி. எம். சி.

(4 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் மோதலில் ஐந்து புலிகள் வீரச்சாவு

மன்னார் பட்டினத்தில் சிறிலங்கா பொலிஸ் நிலையம் மீது நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது ஐந்து விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்தனர்,

★ மேஜர் நாவண்ணன் (ஜஸ்மின்), மரியதாஸ் அன்ரன் யூட்லஸ் யூட் புகையிரத நிலையம், மன்னார், சாவற்காட்டூர்.

★ கப்டன் குமரன், பரமேஸ்வரன் பிரதீபன், நவாலி வடக்கு, மானிப்பாய்.

★ கப்டன் ஸ்ரீ காந், பொன்னுச்சாமி குகதீஸ்வரன், மட்டக்களப்பு.

★ லெப்டினன்ட் அறிவினார், கணேஸ் பாலச்சந்திரன்

(4 ஆம் பக்கம் பார்க்க

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மன்னார் பட்டினத்தில் நேற்று முன்தினம் பொலிஸ் நிலையம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குததலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;

| | | |
|---|---|---|
| ★ 203 பிஸ்டல் | - | 02] |
| ★ அதற்குரிய ஷெல் | - | 11 |
| ★ ரி-56-1 ரக துப்பாக்கிகள் | - | 18 |
| ★ அதற்குரிய ரவைக் கூடுகள் | - | 55 |
| ★ ஏ. கே. கோள்சர் | - | 08 |
| ★ கைக்குண்டுகள் | - | 22 |
| ★ நடுத்தர ரவைகள் | - | 3147 |

## எறிகணை தாக்குதல்

பூநகரி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் நேற்று முன்தினமிரவு எறிகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

நேற்று காலை 6 மணி வரை தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. எறிகணைகள்

(4 ஆம் பக்கம் பார்க்க

## ஊர்காவல்படை பலி

திருகோணமலை மாவட்டத்தில் நீலாப்பளை கிராமத்தில் விடுதலைப் புலிகள் ஊர்காவற்படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இம் மோதலில் ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

## பூநகரியில் மோதல் இரு ராணுவத்தினர் பலி

பூநகரியில் இராணுவ முகாம் பகுதியில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் இரு படையினர் கொல்லப்பட்டனர்

இதுபற்றி சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கையில் பூநகரி இராணுவ முகாமின் முன்னணிக் காவலரணில் ஏற்பட்ட மோதலின் போதே இரு படையினர் உயிரிழந்ததாகத் தெரிவித்தது.

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## தேர்தலைக் குழப்பும் நோக்கம் கொண்டவை

### தாக்குதல் குறித்து ராணுவ அதிகாரிகள்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்து இருப்பது அடுத்த வாரத்தில் நடைபெறவுள்ள தேர்தல்களை குழப்பும் நோக்கம் கொண்டது என்று இராணுவ அதிகாரிகள் கருதுகின்றனர். இவ்வாறு பி. பி. ஸியின் முகவர் ஒருவர்கொழும்பிலிருந்து அறிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் கடந்த சில மாதங்களாக

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை மாவட்டத்தில் காவலரண் மீது தாக்குதல்

### மேஜர் அறிவு வீரச்சாவு



திருகோணமலை மாவடட்டம் மூதூர் நிலாப்பொல என்ற இடத்தில் அமைந்திருந்த இராணுவ காவலரண் ஒன்றின்மீது கடந்த 10-ம் திகதி இரவு 11-15 மணியளவில் விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாச்குதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரம் தெரியவரவில்லை. இத்தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த மேஜர் வினோத்/அறிவு (தம்பிராஜாலிங்கன், திருகோணமலை) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்

## கரடிப்போக்குச் சந்தியில் பஸ் குடைசாய்ந்தது

### ஆலங்கேணி பயணிகள் பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கண்மையில் ஆலங்கேணி நோக்கி வந்து கொண்டிருந்த பயணிகள் வாகனம் ஒன்று நேற்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. இச் சம்பவத்தில் பல பயணிகள் காயமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது. காயமடைந்தவர்கள் பற்றிய விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை-

## இனமதெரியாத சடலம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

இனம்தெரியாத ஆணின் சடலம் ஒன்று காவல்துறையினரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## கட்டுநிதி கிடைத்தது

யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கு இம்மாதச் சம்பளக் கொடுப்பனவை வழங்குவதற்கான கட்டுநிதி நேற்றைய தினம் யாழ். கல்வித் திணைக்களத்துக்குக் கிடைத்துள்ளது. நேற்றைய தினம் பி. ப. 3-30 மணியளவில் யாழ் - நல்லூர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## நாளை மாணவர் அரங்கு

வழமையாக திங்கட் கிழமைகளில் வெளிவரும் மாணவர் அரங்கு தமிழீழ பொதுத் கல்வித் தேர்வை முன்னிட்டு இம்முறை நாளை ஞாயிற்றுக் கிழமை வெளிவருகிறது.

## கிட்டு நினைவு சிறுவர் பூங்கா

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கந்தன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு கேணல் கிட்டு நினைவு சிறுவர் பூங்கா இன்று தொடக்கம் நல்லூர் உற்சவ இறுதி நாள் வரை காலை 10.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை திறந்திருக்குமெனதமிழீழ அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஹைக்கோ, கற்பூரம் மாஜா, வாள்பிளேற், சீயாக்காய், பாக்கு, சீனி விற்னைக்குண்டு. சி. எம். சுகந்தினி 309, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம். (9087)

## நினைவுநாள்

சைவ வித்தியா விருத்திச் சங்கம் நடத்தும் இந்துபோட் இராசரத்தினம் நினைவுநாள் நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

## எறிகணை வீச்சு

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் சடந்த வியாழன் நள்ளிரவு 12.50 மணியளவில் தமது காவல் நிலைகளிலிருந்து பொன்னாலை, மூளாய் பகுதிகளை நோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டனர் இவ் எறிகணைகள் மேற்படிபகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. (41)

## சமூகக்கல்வி செயலமர்வு

சமூகக்கல்வி செயலமர்வும் கருத்தரங்கும் யாழ். கேட்டத்தில் 6 ஆம் ஆண்டு முதல்- 11 ஆம் ஆண்டு வரை சமூகக் கல்வி கற்பிக்கும் சகல ஆசிரியர்களுக்குமான செயலமர்வு 16 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை காலை 8.30 மணிமுதல் 4.30 மணிவரை யாழ். மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு பகுதியில் நடைபெறும். இதில் அனைத்து சமூகக்கல்வி ஆசிரியர்களையும் பங்குபற்றுமாறு கோரப்பட்டுள்ளது.

## நூல் வெளியீடு

தொழில் நுட்பக்கல்லூரி வணிக மாணவர் மன்றத்தின் சிறிலங்கா கணக்கீட்டு நியமம் தமிழாக்க நூல் வெளியீட்டு விழா இன்று சனி காலை 9 மணிக்கு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்.

## கைத்தொழில் சந்தை

நல்லூர் உற்சவ காலத்தை ஒட்டி அங்கே தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினரால் கைத்தொழிற்சந்தை ஒன்று நடத்தப்படவிருக்கிறது.

## அறிவியல் அரங்கு

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச சபை சுழிபுரம்பகுதி சனசமூக நிலையங்களின் உப சமாஜத்தினால் ''அறிவியல் அரங்கு'' நிகழ்வு ஒன்று நடாத்தப்படவுள்ளது.

நாளை 14 ஆம் திகதி ஞாயிறு முற்பகல் 9.30 மணிக்கு மேற்படி பிரதேச சபை தலைமை அலுவலக மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் வலிமேற்கு பிரதேச செயலரும், விசேட ஆணையாளருமான திரு.கா. சந்திரராசா அவர்கள் முன்னுரை வழங்கவுள்ளார். ''சமூகத்தில் மதமும் பண்பாடும்'' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் திருமதி அ. கிருஷ்ணவேணி அவர்கள் விரிவுரை நிகழ்த்துவார் (41)

## மனையியல் கண்காட்சி

மட்டுவில் தெற்கு வேரற்கேணி மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் மனையியற் கலைக்கண்காட்சியும், தையற் கண்காட்சியும் இன்று நண்பகல் ஒருமணிக்கு மேற்படி சங்க மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்படும்.

## பீரிஸ் கருத்து

(கொழும்பு)

ஐ தே. க ஜனாதிபதி பதவியிலிருந்தாலும் கூட, நாம் ஆட்சியமைக்கும் பட்சத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொள்கைகளே அமுல் செய்யப்படும் என பொது ஐ ஐ. முன்னணியின் முக்கியஸ்தர் ஜி. எல். பீரிஸ் கூறியுள்ளார்.

## உரையரங்கு

அறவழி இலக்கிய பேரவை நடத்தும் இலக்கிய உரையரங்கு நாளை ஞாயிறு மாலை 3. 30 மணியளவில் கைதடி நுணாவில் அறவழி பயிலகத்தில் நடைபெறவுள்ளது.

இவ் உரையரங்கில் 'திரைப்பட ரசனை' என்னும் பொருளில் திரு. அ. ஜேசுராசா உரை நிகழ்த்துவார்.

## இறுதிப்போட்டி

அரியாலை ஆலாலசுந்தரம் ஞாபகார்த்த 50 ஓவர் கொண்ட கிரிக்கெட் இறுதிப் போட்டி இன்றுகாலை அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். போட்டியில் ஜொனியன்ஸ் கழகத்தை எதிர்த்து ஜொலிஸ்ரார் கழகம் மோதும்.


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 1977-5-17

தமிழீழ மண்ணில்: 25-7-1993

2-ம் லெப். புகழரசன்

(சின்னத்துரை கோணேஸ்வரன்)

(காரைநகர்)

திதி: 13-08-94

இவருடன் இதயபூமி தாக்குதலில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலி

சத்தியக்காடு அகதிமுகாம் சுழிபுரம். (9084) உன்பிரிவால் துயருறும் -குடும்பத்தினர்

## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி

## தவறிவிட்டது

கொடிகாமம் இருந்து தனங்களப்பு ஊடாக யாழ் வரும் போது மோட்டார் கார் பதிவுச் சான்றிதழ் [ இல: 9 ஸ்ரீ 4053 ] ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் அல்லது சாவகச்சேரி அம்பாள் பார்மசியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (9085)

G.A.Q. (Ist in Com.)

யாழ். பல்கலைக்கழகம் (வெளிவாரி)

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன

விபரங்களுக்கு

S. அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளச்சந்தி-யாழ்.

(சி-10091)

இந்த விளம்பரத்தை பார்க்காதீர்கள்! ஆனால் வாசியுங்கள் !!!

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா, நல்லூர் திருவிழாவை முன்னிட்டு விரத சுத்த போசன உணவுப் பார்சல்களை காலை 11.30 மணி முதல் பிற்பகல் 3-30 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். தாமதமோ! தடையோ இல்லை.

ரூபா 25/ மட்டுமே

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா உள்ளூர் விருந்தகம்

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை) கொழும்புத்துறைச் சாலை சுண்டுக்குளி

வழமையான உணவுப் பார்சல்களும் கிடைக்கும். ரூபா 30/-

புதுயுகத்தில் புது உருவம்

ஜெசித்தாரா

(சி-10094)


## பதவி உயர்வு

சிறிலங்கா கடற்படையில் கொமடோர் அந்தனி சிசில் திசேரா ரியர் அட்மிரலாக பதவி உயர்வு பெற்றுள்ளார். பிரிகேடியர் டி. சிவசண்முகம் இராணுவ தலைமையகத்தின் இத்த உபகரண கட்டுப்பாட்டு ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஓய்வூதிய வவுச்சர்கள்

(யாழ்ப்பாணம்)

ஆவணி மாதத்திற்கான ஓய்வூதிய வவுச்சர்கள் யாழ். கச்சேரிக்கு வந்துசேர்ந்துள்ளதாக தெரியவருகிறது. (88)


## 35-ம் நாள் நினைவஞ்சலி



ஈன்றவர் மனதில் 17-10-1975

ஈழவர் மனதில் 11-08-1994

லெப். கோபால் / உலகன்

(மாணிக்கப்பிள்ளை பன்னீர்ச்செல்வன்)

பூபாலனே பூபாலனே புவியாளப் பிறந்தவனே
பூலோகம் போதுமென்று போனதென்ன சொல் எமக்கு
சாப்பென்று நாமிருந்தோம் காணாமல் போனதென்ன
களம்பல கண்ட செல்வா கனவிலும் மறப்போமோ
காவிய நாயகனாய் கரந்தொழிந்து மறைந்ததென்ன
ஆயிரம் மதங்கொள் யானை ஆர்ப்பரித்தெழுந்
- திட்டாலும்
பாயிரம் பாடிக்கொண்டு பகைவரை அழித்
- தொழிப்போம்
பேயினும் கொடியர் எம்மை கொடுமைகள் பல
- செய்தாலும்
தாயினும் மேலாம் தமிழ் அன்னையை மீட்போம் நாமே
தேடியே அழித்து எம்மை தெருவிலே எறிந்திட்டாலும்
கோடியாய் எமது வீரர் கொதித்தெழுந்து ஓடிவந்து
நாடிய தமிழீழத்தை நம்மவர் அமைப்பர் காண்பீர்
வாடிய எமது மக்கள் வான்புகழ் பாடும் போது
நீயும் உன் தோழர் யாவரும் சேர்ந்து ஆங்கே
தமிழனின் தாகம் தமிழீழத் தாயகம் என்று
மங்களம் இசைக்கலாமே!

இன்று எமது இல்லத்தில் நிகழும் 35-ஆம் நாள் நினைவில் கலந்துகொள்ளும் வண்ணம் சக போராளிகள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

தியாகசீலம், கூழாவடி, ஆனைக்கோட்டை. - குடும்பத்தினர் (9086)

## நினைவு கூருகின்றோம்...

13-08-1994...

ஒட்டி அங்கு தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினரால் கைத்தொழிற்சந்தை ஒன்று நடத்தபடவிருக்கிறது.

இதுவரை காலமும் தங்கள் உற்பத்திகளை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதில், விளம்பரப்படுத்தலில், விற்பனை செய்வதில் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கியிருந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இக் கைத்தொழிற்சந்தை உதவும் எனக் கருதப்படுகிறது.

இக்கைத்தொழிற்சந்தையிலே கையாளப்படும் சிறப்பான விளம்பர உத்திகளை, சிறப்பான புதிய அறிமுகங்களை, கண்டுபிடிப்புக்கள் முதலியவற்றுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புவோர் திருநெல்வேலி, இராமநாதன் வீதியிலுள்ள தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினரோடு தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## விளையாட்டுப் போட்டி

(தொல்புரம்)

யாழ்- தேசிய சர்வோதயத்தின் ஆதரவில் இயங்கிவரும் நாவற்குழி சிவமணி பாலர் பாடசாலையும், கைதடி வசந்தி பாலர்பாடசாலையும் இணைந்து நடாத்திய விளையாட்டுப்போட்டிகள் அண்மையில் வெகுசிறப்பாக நடைபெற்றன. இவ் விளையாட்டுப் பெருவிழாவில் சாவகச்சேரி பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், மாவட்ட இணைப்பாளர் திரு. பா. செல்வரத்தினம், சர்வோதய பாலர் பாடசாலைகளின் பொறுப்பாளர் செல்வி கா. திலகராணி உட்பட மற்றும் பலர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பாடசாலைகளுக்கான தெரிவு நிலையில் சிவமணி பாலர் பாடசாலை 1 ஆம் இடத்தையும், வசந்தி பாலர்பாடசாலை 2 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (41)

## 31-ம்நாள்கண்ணீர்அஞ்சலி



தாய் மடியில் மலர்வு

1975. 10. 27

வன்னிக் காட்டில் உதிர்வு

1994. 07. 14

### லெப்டினன்ட் அமல்

[அருளப்பு சார்ளிஸ்]

ஆல மரம் சாய்ந்ததுவோ
எம் - அகல்விளக்கு ஓய்ந்ததுவோ
வான்நிலவு மறைந்ததுவோ
எம் - வண்ணமலர் வாடியதோ

மடி தவழ்ந்த தலைமகனே - நீ
மண் மலர விரைந்தாயோ
'சார்ளிஸ்' என நாமம் நேசமாய் அழைத்திடுவோம்
விடுதலைப் பாதையிலே வேற்றுநாமம் 'அமல்' ஆனாய்

பெரும் பழி தீர்த்திடவே பெருமையுடன் புறப்பட்டாய்
எதிரியை சாய்க்க அவன் எல்லைக்கே சென்றிருந்தாய்

யாழ் கரைநகரில் மலர்ந்த மலர் - நீ
வன்னிக் காட்டிற்கு வாசமலர் ஆகினையோ

வென்று கொடி கொண்டு வருவாய் என
விடியும் நாள் காத்திருந்தோம்
வெற்றுடல் தன்னும் காணா - நம்
வேதனை அறிவாயோ.

வன்னியில் இவருடன் வீரச்சாவெய்திய மற்றைய மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகிறோம்.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரர்கள், அம்மம்மா, அப்பம்மா, அன்ரிமார், மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

இல.45, புதிய கடற்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

(9060)

அறிந்ததைச் சொல்லுங்கள்!
பதக்கத்தை வெல்லுங்கள்!

## தமிழீழத் தாயகத்தை தெரிந்து வையுங்கள்.

உங்கள் அறிவு மேம்படுத்தலுக்கு

"தமிழீழத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்"
வினாவிடைப் போட்டி

**ஒரு பவுண் தங்கப் பதக்கம் பரிசு**

அன்பு மாணவர்களே!

**உங்கள் அறிவினை வளமாக்கி**
**உங்கள் திறமையை வெளிக்காட்டுங்கள்**

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியினரால் நல்லூர்க் கண்காட்சியை முன்னிட்டு நடாத்தப்படவிருக்கும் வினாவிடைப் போட்டியில் கலந்து கொண்டு முழுநிறைவான தங்கப்பதக்கத்தையும் பெறுமதி மிக்க பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:- 15-08-1994**

விபரங்கள் கடந்த 07, 08, 09-ம் திகதி பத்திரிகைகளில்

உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

(சி-10099)

## 13-08-1994...

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **ஆனந்தன்** (சு. சிவானந்தராசா - எல். வி -3, கிளிவெட்டி, மூதூர் - திருமலை)

1986 ஆம் ஆண்டு மன்னார் அடம்பன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய -

**பன்னீர்** (இரத்தினம் பன்னீர்செல்வம் - கல்முனை 3- அம்பாறை)

1989ஆம் ஆண்டு மட்டு - மியாங்குளம் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கேதீஸ்** (கு. கிருபைராஜா - சேனைக்குடியிருப்பு, கல்முனை - மட்டு)

1990ஆம் ஆண்டு மட்டு - ஆரையம்பதிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது விழுப்புண்ணடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**பிரியவன்** (பொன்னையா தயாளன் - ஆரையம்பதி- மட்டு)

மன்னார் - மாந்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**ராஜன்** (தொம்மை மிலேஸ் சிங்கம் - மணல்மோட்டை மன்னார்)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சதீஸ்** (நாகேஸ்வரன் விக்னேஸ்வரன் - சில்வா வீதி, வட்டக்கச்சி - கிளிநொச்சி)

1991ஆம் ஆண்டு கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சீசர்** (தர்மதாஸ் அன்ரன் ஜெகதாஸ் - வெளிச்ச வீட்டு வீதி - பருத்தித்துறை)

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10103)

## சிந்தனைக்கு..

கிழக்கு காற்று கடுமையாக வீசும்போது மேலங்கியை அணிந்துகொள்வதை தவிர வழியில்லை - ஜேம்ஸ் ரஸ்சல்லோவெல்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 13-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## வெளிப்படும் சுயரூபம்

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதித் தலைவியும், மேல் மாகாணசபை முதலமைச்சருமான சந்திரிகா குமாரணதுங்கா இதுவரை சிரமப்பட்டு மறைத்து வந்ததை இறுதியாக வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டு விட்டது. இது சிலரைப் பொறுத்து ஏமாற்றம் அளிக்கக்கூடியதாக இருக்கலாம். ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்து பெரிதும் நன்மை பயக்கக்கூடியதே யாகும்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கு ஒருபோதும் தாம் உடன்படப் போவதில்லை என்பதை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஏற்கனவே வெளிப்படையாகக் கூறி வந்துள்ளார். சுதந்திரக்கட்சியின் செயலாளரும் இதனை அடிக்கடி ஊர்ஜிதப்படுத்தியும் வந்துள்ளார்.

ஆனால், சந்திரிகா குமாரணதுங்காவும் இந்நிலைப்பாட்டையே கொண்டிருப்பினும், அவர் அதனை வெளிப்படையாகக் கூறுவதைத்தவிர்த்தே வந்தார். இனப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணப்படும் என்ற தனது அறிவிப்பிற்கு, இவ் அறிவிப்பானது முட்டுக்கட்டையாக உருவாகிவிடும் என்ற எண்ணமே அவரது இத்தவிர்ப்பிற்குக் காரணம் எனக்கொள்ளலாம்.

ஆனால், சந்திரிகா குமாரணதுங்காவின் இம் மௌனமானது. எதிரணியினருக்கு ஓரளவு சாதகமாகஇருந்ததென்றே கொள்ளலாம். வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கு விடுதலைப்புலிகள் - சந்திரிகா குமாரணதுங்கா இரகசிய உடன்பாடு செய்து கொண்டார் என்ற அளவிற்குப் பிரசாரம் செல்லும் அளவிற்கு வாய்ப்பைக் கொடுத்தது.

அத்தோடு, பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிடும், வாசுதேவ நாணயக்கார தொலைக்காட்சி விவாதமொன்றின் போது ''தமிழர்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மையாக வாழும் வடக்கு-கிழக்கு மாகாணங்களை ஒரே நிர்வாக மாவட்டமாக இணைத்துக் கொள்வதே வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு ஒரே தீர்வாகும்'' எனக் குறிப்பிட்டமையும் புதிய சர்ச்சையை உருவாக்கியது.

வாசுதேவ நாணயக்கார பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிடுவதால், இது பொதுஜன

# தென்னிலங்கைத் தேர்தல்களம்

## யுத்தமும் அபிவிருத்தியும் ஒரேசமயத்தில் இடம்பெறமுடியாது

### சுதந்திரக்கட்சி எம். பி. கிரியல்ல

(கொழும்பு)

பொலிசாரில் 90 சதவீதமானோர் பொது ஜன ஐக்கிய முன்னணியையே ஆதரிக்கின்றனர். சீருடையை மாற்றி விட்டு இரவு 10 மணிக்கு பின் இரகசியமாக எம்மை சந்தித்து எமக்கு ஆதரவு வழங்குவதாக உறுதி அளித்து செல்கின்றனர். தினமும் எமக்கு ஆதரவு அதிகரிக்கிறது என முன்னாள்சுதந்திரக்கட்சி எம். பி லக்ஷ்மன் கிரியல்ல தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

நாம் ஆட்சிக்கு வந்தால் ஆறுமாத காலத்தில்வடபகுதி போரை முடிவிற்கு கொண்டு வருவோம். யுத்தமும் அபிவிருத்தியும் ஒரே சமயத்தில் இடம்பெற முடியாது. பேச்சுவார்த்தையின் அடிப்படையில் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவந்து வருடாவருடம் செலவாகும் 25 ஆயிரம் மில்லியன் ரூபாய்களை அபிவிருத்திக்காகசெலவிடுவோம். 1983 இல் கலவரத்தை தூண்டியவர்களும் தமிழருக்கெதிராக யுத்தம் தொடங்கியவர்களுமே இன்று ஐ. தே. கவில் இருக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## பிரேமா இருந்திருந்தால் தேர்தலில் புதிய வடிவம்

### ஹேமா பிரேமதாசா தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் ஐ. தே கவை நாம் அமோகமாக வெற்றியீட்டச் செய்ய வேண்டும் மறைந்த என் கணவர் பிரேமதாசா உங்களை எல்லாம் பார்த்துக்கொண்டிருகிறார் இவ்வாறு ஹேமா பிரேமதாசா கொழும்பில் போட்டியிடும் ஒஸி அபேகுணசேகரவை ஆதரித்து வாழைத் தோட்டப்பகுதியில் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் பேசிய போது குறிப்பிட்டார்.

அமரர் பிரேமதாசாவை கௌரவிக்கவே இங்கு வந்தேன். அவர் இன்று உயிரோடிருந்தால் இத்தேர்தலில் புதியதோர் வடிவத்தை காட்டியிருப்பார். அவர்மரணித்தமை துர்ப்பாக்கியமாகும். எனக்கு தேர்தல் மேடையில் பேசப்பயமில்லை. வெற்றியை நோக்கி எம் பேச்சுக்கள் அமைய வேண்டும்எவரையும் குறை கூறக்கூடாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

## வெற்றிக் கூட்டங்கள் நடத்த பொலிஸ் தடை

(கொழும்பு)

தேர்தல் முடிவுகள் வெளியானதும் வெற்றி ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மாஅதிபர் பிராங் டி சில்வா தெரிவித்தார். வாக்குச்சாவடி ஒன்றின் அமைந்துள்ள அரைமைல் எல்லைக்குள் மக்கள் கூட்டமாக குழுமி நிற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் அறிவித்துள்ளார்.

கடமையிலீடுபடும் 40 ஆயிரம் பொலிசாருக்கு உதவியாக ஆயுதப்படையினரும் நிறுத்தப்படுவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நோயாளர்களிடையே தேர்தல் பிரசாரங்கள்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் ஆதரவாளர்களின் பிரசார நடவடிக்கைகள் காரணமாக மாத்தளை ஆதார வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆதரவாளர்கள் தமதுவேட்பாளர்களின் சின்னம், இலக்கம் பொறிக்கப்பட்ட அட்டைகள் சகிதம் காலையில் வைத்தியசாலைக்கு சென்று வெளிநோயாளர்களிடையே பிரசா

செலவில் கொண்டு சென்று விடுகின்றனர்.

நோயாளர் பார்வையிடும் நேரங்களில் வைத்தியசாலையினுள் சென்று கட்டிலில்படுத்திருக்கும் நோயாளிகளிடம் சென்று தேர்தல் பிரசாரம் செய்கின்றனர்.

நோய்குணமானவுடன் ஆட்டோக்களில் வீட்டுக்கு தமது செலவில் அனுப்பிவைப்பதாக உறுதியளிக்கின்றனர். துண்டு வெட்டி வெளியில் வருபவர்களை தமது சொந்த செலவில் ஆட்டோக்களில் அவர்களை அனுப்பிவைக்கின்றனர்.

இவர்களின் இந்நடவடிக்

## திருத்தம்

நேற்றைய வெள்ளி மஞ்சரியில் ''மண்டேலா காண்பிக்கும் கம்பிமேல் நடக்கும் வித்தை'' என்ற பாலகுமாரன் எழுதிய கட்டுரையில், தேசத்தின்ஈட்டிஎன்பதன்ஆங்கிலப்பதம் UMKHONTO WE SIZWEஎனவும், தாபோ எம்பேக்கி என்பதன் ஆங்கில பதம் THABO MBEKI எனவும், சிறில் ரம்போசா என்பது சிறில்ரமபோசா (CYRIL RAMAPHOSA) எனவும், குலுமன்ஸ் குட்வில் சுவெயத்தினி என்பது, சூலு மன்னர் குட்வில் சுவெலத்தினி எனவும் இடம்பெற்றிருக்க வேண்டும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்

## கால்நடைகளுக்கு முதலுதவி

முல்லை மாவட்டத்திலுள்ள கால்நடைகளுக்கு முதலுதவிச் சிகிச்சை அளிப்பதற்கான நடவடிக்கையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கால் நடை வளர்ப்பை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இத்திட்டத்தின் மூலம் மிருக வைத்தியர் வாரத்தில் இர

## டயர் மாலைகளை சூட்டியது யார்?

### பொ. ஐ. மு.வேட்பாளர் கேள்வி

(பதுளை)

தமது பிள்ளைகளை இழந்து கியூவில் காத்திருக்கும் தாய்மார்களின் சாபம் இனிமேல் ஒருபோதும் ஐக்கிய தேசியக்கட்சியைப் பதவிக்கு வர இடமளிக்காது என பதுளைமாவட்ட பொதுமக்கள் கூட்டணி வேட்பாளர் திருமதி ஹேமா ரட்நாயக்கா தெரிவித்துள்ளார்.

ஐ. தே கட்சியினர் பொ. ம. கூட்டணி வேட்பாளர், சிறிலங்கா சுதந்திர கட்சியாளர்களை கொலைக்காரர்பட்டம் கட்டி வருகிறார்கள். ஜே வி. பி. அராஜகத்தை சாட்டாகக் காட்டி இளைஞர் சமுதாயத்தை அழித்தொழித்தவர்கள் யார்? இளைஞர்களுக்கு டயர்மாலை சூட்டி. இரவு பகலாக கொலை செய்தவர்கள் யார்? அரிசி, பால் மா, சீனி, புடவை கியூ இன்று இல்லை. ஆனால் இன்று மகன்மார்களை இழந்த தாய்மார்களின் கியூ வளர்ந்துள்ளமை யு. என். பி. கண்களுக்குத் தெரிவதில்லை, கியூவில் இருக்கும் தாய்மார்களின் சாபம் ஐ. தே. கவினை பதவிக்குவர இடமளிக்காது.

கடந்த 17 வருடங்களாக இந்தநாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்த ஐ. தே. க. அரசாங்கத்திற்கு தக்கபாடம் புகட்ட இளைஞர்களும் தாய்மார்களும் தகுந்த தருணம் பார்த்து இருக்கிறார்கள் என்றார்.

## உங்களைப் போன்றே நானும் கலங்குகிறேன்

### சந்திரிகா பத்திரிகைகளில் விளம்பரம்

(கொழும்பு)

''தந்தையை இழந்த மகளாய் உங்களைப் போல் நானும் அழுகிறேன், கணவனை இழந்த மனைவியாய் உங்களைப் போல் நானும் கலங்குகிறேன், குழந்தைகள் நலன் கருதும் ஒரு தாயாய் உங்களைப்போல் நானும் வருந்துகிறேன், கடந்த காலங்களில் உங்களைப்போல் நானும் புலம்பினேன்'' இத்தகைய வசனங்களுடன் கூடிய தேர்தல் விளம்பரங்கள் சந்திரிகா குமாரணதுங்கவினால் கொழும்பு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

தாய்மார்களே சகோதரிகளே என்றதலைப்பிலான இத்தேர்தல் விளம்பரத்தில் இரு இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டு எரிந்த நிலையில் வீதியில் போடப்பட்டிருக்கும் புகைப்படம் ஒன்றும் கண்கலங்கி நிற்கும் ஒரு தாயின் புகைப்படம் ஒன்றும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கணவனைக் காணவில்லை, மகனைக் காணவில்லை, மகளைக் காணவில்லை இவ்விதம் அவலக்குரல் மீண்டும் எழாதிருக்க புதிய நாட்டை கட்டியெழுப்புவோம் என இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யுத்தம் மூலமே தீர்வு என முன்புகூறியது சுதந்திரகட்சி

### ஒஸி அபே குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினையை யுத்தம் மூலம் தீர்க்க வேண்டும் அதற்காக அரசு படையினருக்கு நவீன ஆயுதங்களை வழங்குவதில்லை என்று கூப்பாடு போட்ட சுதந்திரக்கட்சியினர் இப்போது இனப்பிரச்சினையை பேச்சு வார்த்தை மூலம் தீர்க்கவேண்டும் என்கி

நிச்சயமாக பிளவுபடும். வடக்கிற்கு மின்சாரம் வழங்கக் கூடாது என முன்னர் இவர்கள் வற்புறுத்தினர். ஒவ்வொரு மூன்று மைலுக்கும் இராணுவ முகாம் நிறுவுமாறு கோரினர்.

கிழக்கின் ஒருபகுதியை வடக்கோடு இணைப்பதற்கான

எனக் குறிப்பிட்டமையும் புதிய சர்ச்சையை உருவாக்கியது.

வாசுதேவ நாணயக்கார பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிடுவதால், இது பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிலைப்பாடா என்ற கேள்வி எழுந்தது. பௌத்த பீடங்களைச் சேர்ந்த மாநாயக்க தேரோக்கள் இது குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் விளக்கம் கோரினர். இந் நிலையானது பொதுஜன ஐக்கிய முன்னணி தனது உண்மையான நிலைப்பாட்டை சகலரின்முன் வைக்கவும் அவர்களுக்கு விளக்கவும் வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்தது.

இதைத் தொடர்ந்தே சந்திரிகா குமாரணதுங்கா, வடக்கு-கிழக்கு இணைப்பை தான் ஒருபோதும் ஏற்கப் போவதில்லை என்றும், அரசியல் ரீதியான முயற்சிகள் தோல்வி அடைந்தால் ஒரு குறிப்பிட்ட குழு தாக்குதல் நடத்துவதைப் பார்த்துக் கொண்டு அரசு வாளாவிருக்க முடியாது என்றும் தமது சுயமான நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளார்.

எந்தவகையிலோ சந்திரிகா குமாரணதுங்கா தமது உண்மையான நிலைப்பாட்டினை வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் வந்து விட்டமை வரவேற்கத்தக்கதொன்றுதான். இதன் மூலம், சந்திரிகா குமாரணதுங்கா வாக்காளர்களுக்கு - குறிப்பாகத்தமிழ் வாக்காளர்களுக்கு- கொடுக்க நினைத்த ஒரு போலியான நம்பிக்கை இல்லாது ஒழிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனில் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு என்பது வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்புடன் அதாவது தமிழர்தாயகம் இணைந்தே இருத்தல் என்பதன் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படக் கூடியதாகும். இந்நிலையில் வடக்கு-கிழக்கு இணைப்பற்ற ரீதியில் இனப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வைக்கண்டுவிட முடியும்?

அடுத்ததாக, பேச்சுவார்த்தைகள் தோல்வி அடைந்தால், இராணுவ நடவடிக்கை என்ற அறிவிப்பானது பொதுஜன முன்னணி ஆட்சிக்கு வருவதாலும் யுத்தம் ஓய்வதற்கான வாய்ப்புக்கள் குறைவாக உள்ளதையே காட்டுகின்றது. ஏனெனில், வடக்கு-கிழக்கு இணைப்பில்லாத பேச்சுவார்த்தை ஒன்று எத்தகைய தூரம் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் கொண்டு வரமுடியும்?

இந்தவகையில், தமிழ் மக்கள் சிறிலங்காவில் நடக்கப்போகும் 10-வது பாராளுமன்றத்தேர்தலின் வெற்றி தோல்வி பற்றி அக்கறைப்படவோ, அன்றி கவலைப்படவோ எதுவுமில்லை என்றே கூறலாம். ஏனெனில் யார் வென்றாலும் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வென்பது கானல் நீராகவே இருக்கும்போல் தெரிகின்றது.

கம் பொறிக்கப்பட்ட அட்டைகள் சகிதம் காலையில் வைத்தியசாலைக்கு சென்று வெளி நோயாளர்களிடையே பிரசாரம் செய்கின்றனர். கடும் நோயாளிகளை ஆட்டோக்களில் பஸ்நிலையத்திற்கு தமது களை தமது சொந்த செலவில் ஆட்டோக்களில் அவர்களை அனுப்பிவைக்கின்றனர்.

இவர்களின் இந்நடவடிக்கையினால் கடும் நோயாளர்கள் பெரும் சிரமமடைவதாக தெரிவிக்கப்படுகிறது.

# சந்திரிகாவுக்கு அச்சுறுத்தல் புலிகளிடமிருந்தல்ல

## ஹமில்டன் கூற்றுக்கு மறுப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் உப தலைவி சந்திரிகா குமாரணதுங்காவுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் புலிகளிடமிருந்தல்ல; அவரது அரசியல் எதிரிகளிடமிருந்தே என சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

புலிகளிடமிருந்தே சந்திரிகா குமாரணதுங்காவுக்கு அச்சுறுத்தல் உள்ளதாக இராணுவ புலனாய்வு வட்டாரங்கள் கூறுவதாக பாதுகாப்பு செயலாளர் ஹமில்டன் வனசிங்கா கூறியதற்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சந்திரிகாவுக்கான உண்மையான பாதுகாப்பு மக்களின் கைகளில்தான் உள்ளது எனவும் அவர் கூறினார்.

# வாக்கு எண்ணுதல் 3 கட்டமாக நடைபெறும்

(கொழும்பு)

இடம்பெயர்ந்தவர்களின் வாக்குகளை எண்ணுவதற்காக தனியான வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் எனத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வாக்குகள் எண்ணுதல் 3 பிரதான கட்டங்களாக மேற்கொள்ளப்படும்- 1-வது கட்டத்தில் மொத்தமாக வாக்குகள் எண்ணப்படும். 2-வது கட்டத்தில் கட்சிகள் பெற்ற வாக்குகள் எண்ணப்படும், இறுதிக் கட்டமாக விருப்பு வாக்குகள் எண்ணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

முதலாவது தேர்தல் முடிவு 17-ந் திகதி நள்ளிரவுக்குச் சற்று முன்பாக கிடைக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது-

# உலகில் இல்லாத வகையில் சமாதானம் ஏற்படுத்துவேன்

## ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க

உலகில் எங்கும் இல்லாத வகையிலான சமாதானத்தை விரைவில் இலங்கையில் ஏற்படுத்துவேன். இவ்வாறு நுவரெலியாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஐ. தே. க. மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதன் மூலம் இதனை ஏற்படுத்துவோம். இன-மத-பேதம் இந் நாட்டில் இருக்க மாட்டாது. இலங்கையில் ஆட்சி செய்த அரசாங்கங்களிலேயே ஊழல் நிறைந்த அரசு என்றால் அது சுதந்திரக் கட்சியின் அரசாங்கம் தான். சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் உண்ண உணவு-உடுக்க உடை-இல்லாமல் இருந்த நிலையை மக்கள் மறந்து விடவில்லை எனவும் குறிப்பிட்டார்.

கால் நடை வளர்ப்பை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இத்திட்டத்தின் மூலம் மிருக வைத்தியர் வாரத்தில் இரண்டு முறை கால்நடை சுகாதார சேவை நிலையங்களை மேற்பார்வை செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்படுகின்றது.

இந்தநடவடிக்கையின் முதற்கட்டமாக கடந்த மாதத்தில் பல கால்நடைகளுக்கு முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்பட்டதோடு 17 பண்ணையாளர்களின் கோழிகளுக்கு மருந்து வழங்கப்பட்டு இவர்களுக்கு ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இம்மாவட்டத்தில் மேலும் இத்திட்டத்தினை விரிவுபடுத்தும் நோக்கில் நெடுங்கேணிப் பிரதேசத்திலும் ஒரு சுகாதார சேவை நிலையம் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994.08.13**
**சனி இரவு**

08.01 - அறிவியற்கலசம்
08.10 - நிகழ்வும் பகிர்வும்
08.25 - நேயர்கடிதங்கள்
08.30 - செய்திகள்
08.40 - சித்திரம் - ''அழிவுக்கு வழிகோலும் சுகாதாரச் சீர்கேடு''

**1994-08-14**
**ஞாயிறு காலை**

07.02 - மாவீரவணக்கம்
07.15 - களத்தில் மலர்ந்தவை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

போட்ட சுதந்திரக்கட்சியினர் இப்போது இனப்பிரச்சினையை பேச்சு வார்த்தை மூலம் தீர்க்கவேண்டும் என்கின்றனர் என ஐ.தே.க கொழும்பு வேட்பாளர் ஒஸி அபேகுணசேகர தெரிவித்தார்.

மகரகம சந்தியில் பிரசாரக் கூட்டத்தில் பேசிய அவர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் யோசனைகளால் நாடு கோரினர்.

கிழக்கின் ஒருபகுதியை வடக்கோடு இணைப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. இது காலஞ்சென்ற பண்டார நாயக்கா மற்றும் விஜே குமாரணதுங்க ஆகியோரது கொள்கைகளுக்கு முரணானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# பொதுத்தேர்தல் முடிவுகள் 17ஆம் திகதி வெளிவரும்

(கொழும்பு)

சிறிலங்காவின் பொதுத் தேர்தல் வரும் செவ்வாய்க் கிழமை நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகி விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அதிகாரிகள், பொலிசார் சகலரும் திங்களன்று வாக்குச் சாவடிகளுக்குச் செல்வர். இதேநேரத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் சுறுசுறுப்படைந்துள்ளன. அசம்பாவிதங்களும் நிகழ்ந்துள்ளன. கடந்த திங்கள் வரை 1200 க்கு மேற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதேவேளை பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருகிறது. சுமார் 40 ஆயிரம் பொலிசார் நாளை முதல் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். ஒரு லட்சம் ஊழியர்கள் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இம்முறை 1 கோடி 9 லட்சம் பேர்வரை வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 75 சதவீதமானோர் வாக்களிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களுக்கென 9500 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. வாக்களிப்பு காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை நடக்கும். வாக்குப் பெட்டிகள் இரவு 8 மணிக்குள் வாக்கெண்ணும் நிலையங்களுக்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது வாக்கெண்ணும் வேலை இரவு 9 மணிக்கு ஆரம்பமாகும். மாவட்டத் தேர்தல் முடிவுகள் 17 ஆம் திகதி அதிகாலை முதல் வெளியாகும். விருப்பு வாக்குகள் 17ம் திகதி மாலையளவில் வெளிவருமெனத் தெரியவருகிறது.

# பொலிஸ்மீது குண்டுவீச்சு ஐ. தே. கவே காரணம்

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதியில் கடந்த மாதமளவில் இடம்பெற்ற, பொலிசார் மீதான கைக்குண்டுத்தாக்குதல் சம்பவங்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் திட்டமே என கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.


இப்படியான தாக்குதல்களை நடாத்தி, அதன்மூலம் நகரத்தில் அமைதியின்மையை உருவாக்குவதன் மூலம், வாக்காளர்களை திசைதிருப்ப முயல்வதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

நகரப் பகுதியில் இராணுவத்தினரையும் கடமையிலீடுபடுத்த செய்யப்பட்ட தந்திரத்தின் ஒருபகுதியே இக்குண்டுத்தாக்குதல்கள் எனவும் அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.


# மன்னார்தீவு தாக்குதலில் வீரச்சாவடைந்தோர்



மேஜர் நாவண்ணன் (ஜஸ்பின்)



கப்டன் குமரன்



கப்டன் ஸ்ரீகாந்



லெப். அறிவினார்



லெப். ராஜா

பூரண இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் தீவினுள் அமைந்திருந்த பொலிஸ் நிலையம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய கொமாண்டோ தாக்குதலில் 5போராளிகள் வீரச்சாவடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## சிங்களவர் குடியேற்றம்

(கொழும்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமிழர்கள் வெளியேறிய கிராமங்களில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு வருகின்றனர். குறிப்பாக அம்பாறை மாவட்டம் குளத்தாப்பிட்டி கிராமத்தில் இராணுவ அச்சுறுத்தல் காரணமாக வெளியேறிய தமிழர்களிற்கு சொந்தமான சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பில், சிங்களவர்களைக் குடியமர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## ஜனாதிபதிக்கு நவீன தொலை தொடர்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள, ஜனாதிபதி செயலகத்தில் நவீன தொலைத் தொடர்புச் சாதனங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. தேர்தல் காலத்தில் நாட்டின் சகல பாகங்களோடும் நேரடியாகத் தொடர்பு கொள்ளத் தக்க வகையில் இவை அமைக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தோடும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தோடும், ஜனாதிபதியின் விசேட அறிவித்தல்களை அறிவிக்கும் வண்ணம் இவை பொருத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## உதைபந்தாட்ட போட்டி

வலிமேற்கு உதைபந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள் இன்று மாலை சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. மூன்று மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது அரை இறுதி ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகமும், நான்குமணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் காங்கேசன்துறை யங்றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டு கழகமும் விளையாடவுள்ளன.

## உப அதிபர் விபரம் கோரப்படுகிறது

பாடசாலைகளில் கடமை புரியும் அதிபர், உப அதிபர்

# ராணுவதளபதியைமாற்ற பொ. ஐ. மு. விரும்புகிறது

### ரணில் விக்கிரமசிங்கா தகவல்

இராணுவத் தளபதியான ஜெரி டி சில்வாவை மாற்றுவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி விரும்புவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வராந்தர பத்திரிகையாளர் மகாநாடொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதி ஜெரி டி சில்வாவை மாற்றிவிட்டு முன்னாள் தளபதி சிசில் வைத்திய ரத்னாவை மீண்டும் தளபதியாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக எழுப்பப்பட்டுள்ள வதந்திகளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கட்டுக் கதையே என அவர் மேலும் கூறினார்.

# தேர்தல் பிரசாரங்கள் இன்றுடன் முடிவு

இன்றுடன் பொதுத்தேர்தலுக்கான பிரசாரங்கள் யாவும் முடிவடைவதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது இதன்படி, பிரதான அரசியற் கட்சிகள் தங்களது கடைசித் தேர்தல் பிரசாரத்தை இன்று நடத்துகின்றன

ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு ஹவ்லொக் டிடலிலும் பொதுஜன ஐக்கிய முன்னணி கொழும்பு புதுக்கடையிலும், மகாஜன எக்சத் பெரமுன மகரகமையிலும் கடைசித் தேர்தல் பிரசாரங்களை நடத்துகின்றன.

## பிரபாகரன் - அஷ்ரப் உடன்பாடே அடுத்த வேலை

### முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தெரிவிப்பு

வடக்கு - கிழக்கு பகுதியில் நல்ல சூழல் ஏற்படுவதற்காக பிரபாகரன் - அஷ்ரப் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதுதான் முஸ்லிம் காங்கிரசின் அடுத்த கட்ட நடவடிக்கையாக இருக்கும். இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் நிந்தவூர் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், இந்தத் தேர்தல் எமது எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தேர்தலாகும் இதனை யாரும் தனிப்பட்ட தேர்தலாக எண்ண வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார் இக்கூட்டத்தில் லிபரல் கட்சித் தலைவர் சாகை அமரதுங்கா உரையாற்றினார்.

## பிரபாவுக்கு எழுதிய கடிதம் தவறான முறையில் பிரசுரம்

### அஷ்ரப் கூறுகிறார்

(கொழும்பு)

நான் பிரபாகரனுக்கு கடிதம் எழுதியது பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள இரண்டரை மாதங்களுக்கு முன்பாகும் இந்தக் கடிதத்தை லேக்ஹவுஸ் பத்திரிகைகள் தவறானமுறையில் பிரசுரித்தன என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கூறியுள்ளார்.

தொலைக்காட்சிப் பிரசாரமொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நான் பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் அமைதி நாட ஒன்றுசேர்வோம் எனவும், யுத்தத்தை நிறுத்த முயலுவோம் எனவும் தெரிவித்தேன். ஆனால் லேக்ஹவுஸ் பத்திரிகைகளோ, குழப்பத்தை உண்டாக்குமுகமாக, செய்தியை வெளியிட்டன. இது தொடர்பாக, இலண்டன், தமிழ் ரைம்ஸ் ஆசிரியரும், சண்டே ஒப்சேவர் ஆசிரியருக்கு, கடந்த ஐந்தாம் திகதி கடிதம் எழுதியுள்ளதாகவும் அஷ்ரப் தெரிவித்தார்.

தேர்தலை

போரின் போக்கில் ஒரு வித

# தாதியர் கொடுப்பனவு 3 மாதங்களாக இல்லை

யாழ் போதனா மருத்துவமனையில் தாதிகள் சேவையில் உள்ளவர்களுக்கு கடந்த மூன்றுமாத காலமாக மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படவில்லையென தாதிகள் தெரிவிக்கின்றனர்,

இக்கொடுப்வனவானது முன்னர், நடந்து முடிந்த மாதத்தின் கொடுப்பனவுகள் அடுத்த மாதம் வழங்கப்பட்டு வந்தன அதன்படி கடந்த ஏப்பிரல் மாதத்திற்கான கொடுப்பனவுகள் மே மாதம் வழங்கப்பட்டதாகவும் அதன் பின்னர் மே, யூன், யூலை மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லையென அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (சி)

# திறைசேரி பணம் தரவில்லை கொடுப்பனவில் தாமதம்

### -வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ். போதனா மருத்துவமனைக்கு மாதாந்தம் தேவைப்படும் தொகையான 6.5 மில்லியன் பணத்தை திறைசேரி வழங்காமையே ஊழியர்களுக்கான மேலதிக நேர கொடுப்பனவுகள் வழங்க முடியாமைக்கு காரணம் என வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்,

தாதிகளின் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கலில் ஏற்பட்டுள்ள தாமதம் பற்றி கேட்டபோதே பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த ஆண்டும் இதே போன்று திறைசேரி போதிய நிதியை முதல் மாதங்களில் தரமறுத்தது என்றும் இந்த ஆண்டும் மாதாந்தம் தேவையான 6 5 மில்லியன் பணத்தை திறைசேரி வழங்கவில்லை. என்றும் தற்போது மாதமொன்றுக்கு 5 மில்லியனே கிடைப்பதாகவும் தெரிவித்தார். எனினும் மாதாந்தம் தேவையான 6 5 மில்லியன் பணத்தை பெறுவதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (சி)

# யாழ். ஆஸ்பத்திரிக்கு 20 தாதியர் நியமனம்

யாழ். போதனா மருத்துவமனைக்கு 20 தாதிகள் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் 6 பேர் நேற்று யாழ். போதனா மருத்துவ மனையில் தமது கடமையை பொறுப்பேற்றுள்ளனர்

மேற்படி தாதியர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று யாழ். போதனா மருத்துவ மனையில் இருந்து உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நியமனத்தை கடந்த ஐந்தாம் திகதி பொறுப்பேற்குமாறு அந் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும் நியமனக் கடிதங்கள் நேற்றே யாழ். போதனா மருத்துவ மனைக்கு கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

இந் நியமனம் பெற்ற 20 தாதியரும் யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்று இறுதித் தேர்வில் சித்தி எய்தியோராவர்.

மேற்படி பரீட்சைக்கு 27 பேர் தோற்றிய போதிலும் 20 பேர் மட்டுமே சித்தி எய்தியமை குறிப்பிடத்தக்கது.

(சி), (21)

# மருத்துவ மாணவர் செயல் வருத்தத்திற்குரியதே

### வட இல. மருத்துவக் கல்லூரி மாணவர் தெரிவிப்பு

வட கொழும்பு மருத்துவக் கல்லூரியில் பயின்ற 800 மாணவர்களையும் அரசு உள்வாரியாக்கும் போது வட இலங்கை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த 43 மாணவர்களும் கல்வியைத் தொடர யாழ். மருத்துவபீட மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பது வருத்தத்திற்கு

அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

மேலும் அவ் அறிக்கையில் மருத்துவபீட மாணவர்கள் பல்கலைக்கழக மருத்துவபீட சபை உறுப்பினர்கள், பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்கள், பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்கள்

# வாக்காளர் அனுதாபத்தை பெற சந்திரிகா முயற்சி

### ஐ. தே. க. செயலர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தனது பிரசார கூட்டங்களை கைவிடுவதன் மூலம்,

சதித்திட்டம் எதுவுமில்லை, புகார் குறித்து, இரகசியப் பொலிசார் சந்திரிகாவை

(கொழும்பு)

தனது பிரசார கூட்டங்களை கைவிடுவதன் மூலம், வாக்காளர்களின் அனுதாபத்தை பெறச் சந்திரிகா முயலுகிறார் என, ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா தெரிவித்துள்ளார்

சந்திரிகா குமாரணதுங்காவின் கொலைச் சதி தொடர்பான புகாரில் எவ்விதமான உண்மையுமில்லை, அவரைப் படுகொலை செய்வதற்கான சதித்திட்டம் எதுவுமில்லை, புகார் குறித்து, இரகசியப் பொலிசார் சந்திரிகாவை தொடர்பு கொண்டபோது தனக்கு நிறைய வேலைகள் இருப்பதாக கூறி அவர்களைச் சந்திக்காமல் விட்டவர், இந்தப் புகாரில் உண்மையில்லை என்பதை காட்டுகிறார்.

சந்திரிகாவை பாதுகாப்பதற்கு அரசாங்கம் 50 இலட்சம் ரூபாவை செலவழிக்கிறது கொமாண்டோ பாதுகாப்பும் அளிக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



வீரச்சாவு : 30-06-1994

### மேஜர் தொண்டமான் / இந்திரன்

(சதாசிவம் கஜேந்திரன்)

எல்லையை மீறி வந்த
எதிரியை துவம்சம் செய்ய
வெங்களம் ஆடிய வேங்கை
வெற்றிகள் பலவும் கண்டாய்
மண்ணினை மணந்த மறவன்
மானத்தில் சிகரம் இமயம்
சுடுவதை நிறுத்திக் கொண்டாய் - உன்
சுடுகலன் நிறுத்த வில்லை
சுவடுகளும் அழியவில்லை.

முல்லை மாவட்டம். - நண்பர்கள்.
(9088)

### விபரம் கோரப்படுகிறது

பாடசாலைகளில் கடமை புரியும் அதிபர், உப அதிபர் விபரங்களை உடன் தமக்கு அனுப்பி வைக்குமாறு வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் மாகாணக் கல்விப் பணிப்பாளர் கே. தியாகராஜா சகல கோட்டக்கல்வி அலுவலகங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களை கேட்டுள்ளார்

இவ் விபரங்களில் அதிபர், உப அதிபர் பெயர் கடமையாற்றும் பாடசாலை அவர்களின் கல்வித் தராதரம் தரம் ஆகியவவைகள் இடம் பெற வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது (17)

### விபத்தில் காயம்

நேற்று முன்தினம் பிற்பகல் யாழ். வெலிங்டன் சந்தியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் ஒருவர் காயமடைந்தார். இவர் உடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (88)

### விடைத்தாள்கள் சென்றன

நடைபெற்று முடிவடைந்த முதலாம் கட்ட க. பொ. த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் மற்றும் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள்கள் என்பன நேற்று கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

நேற்றுக்காலை பருத்தித்துறையை வந்தடைந்த ''நரோமா'' கப்பலிலேயே இவை எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இவற்றுடன் யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவரும் புறப்பட்டுச் செல்கின்றார்.

இவர் கொழும்பில் இருந்து இரண்டாம் கட்ட க. பொ. த (உயர்தர) பரீட்சைக்கான வினாத்தாள்களை இங்கு எடுத்து வருவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வார் என தெரியவருகின்றது. (பா, நி)

### தேர்தலை

போரின் போக்கில் ஒரு விதமந்தநிலை காணப்பட்டது. ஆனால் கடந்த 24 மணி நேரத்தில் நடத்தப்பட்ட வெவ்வேறு தாக்குதலில் படையினர் தரப்பில் 23 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

### எறிகணை

கரையோரப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. தாக்குதல் நடைபெற்ற சமயம் உலங்குவானூர்தியொன்று இரு தடவைகள் இப்பகுதிக்கு வந்து சென்றது.

### புலிகளின்

பொலிஸ் நிலையம் மீது பஸ் வண்டியில் சென்ற விடுதலைப் புலிகளின் கொமாண்டோ அணியினர் தாக்குதல் மேற்கொண்டனர்.

பிற்பகல் 4. 30 மணிக்கு தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டு அரை மணிநேரத்தில் பொலிஸ் நிலையம் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது பின்னர் ஒரு மணிநேரம் அப்பகுதி புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் இருந்தது.

இத்தாக்குதலின் போது சிக்கிய பொலிசாருக்கு உதவி வழங்கும் நோக்கத்துடன் மன்னார் பட்டின இலங்கைவங்கி முகாமிலிருந்தும் சனி விலேஜ் முகாமிலிருந்தும் எழுத்தூர் சந்திநோக்கி முன்னேறிய இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

இத்தாக்குதலை ஊர்ஜிதப்படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் 10 பொலிசார் பலியாகினர் எனவும் 11பேர் காயமடைந்தனர் எனவும் கூறியுள்ளன.

இத்தாக்குதல்களில் ஐந்து விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

ஆசிரியருக்கு, கடந்த ஐந்தாம் திகதி கடிதம் எழுதியுள்ளதாகவும் அஷ்ரப் தெரிவித்தார்.

### கட்டுநிதி

கல்விக் கோட்ட ஆசிரியர்களுக்கான இம்மாதச் சம்பளப் பத்திரங்கள் உரிய கோட்டக் கல்வி அலுவலகங்களினால் உரிய பாடசாலைகளுக்குப் பொறுப்பானவர்களுக்கு வழங்கப்பட்டது. (17)

### 94 ஆம் ஆண்டு

யாளர்கள் இதற்கான கால எல்லை எதிர் வரும் 20-ம் திகதியுடன் முடிவுறுவதால், இத்திகதிக்குள் 94-ம் ஆண்டு வரி அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறியத்தருகின்றனர்.

### சிறுவன்

குகதாசன் (வயது 14) என்னும் சிறுவனே படுகாயமடைந்தவராவார். இவர் தற்போது யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (சி)

### யாழ்.

மிகுதி பதினோராயிரத்து இருநூற்றைம்பத்தெட்டு நோயாளர்களும் சாதாரண மலேரியா நோயாளர்கள் என இரண்டாம் காலாண்டு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (நி, 88)

### மன்னார்

கரவெட்டிதெற்கு கரவெட்டி.

★ லெப்டினன்ட் ராஜா அந்தோனி கிறிஷ்ரி, மட்டக்களப்பு.

ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்.

தொடர யாழ். மருத்துவபீட மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பது வருத்தத்திற்குரியது என வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர் ஒன்றியம் தமது நிலையை விளக்கி விடுத்துள்ளனர்கள், பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்கள் யாவரும் மனிதாபிமான அடிப்படையில் எமது கல்வியைத் தொடர ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கேட்டுள்ளனர்.

## இலவச உணவு முத்திரை செயலகம் வந்தடைந்தது

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தவர்களிற்கான ஆனி ஆடி, ஆவணி மாதங்களிற்கான புள்ளிகளைக் கொண்ட இலவச உலர் உணவு முத்திரைகள் யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன. இவற்றை பிரதேச செயலகங்களிற்கு விநியோகிக்கும் வேலைகள் உடன் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இம்முத்திரைகளை பெற்றுக்கொள்ளாத பிரதேச செயலகங்கள் உடன்பெற்றுக் கொள்ளுமாறு யாழ். கச்சேரி புனர்வாழ்வுப் பகுதியினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (88)

## திருக்கோயில் கடற்பகுதியில் சுழியோடிகள் மீது படை சூடு

### ஒருவர் பலி; வெளிநாட்டவர் காயம்

கல்முனை, திருக்கோயில் கடற்கரையில் கடந்த செவ்வாய் இரவு 7. 45 மணியளவில் நடமாடிய இரு சுழியோடிகளில் ஒருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ராணுவத்தினரின் சமிக்ஞையை பொருட்படுத்தாமல் இவர்கள் நடந்து கொண்டதால், இவர்கள் மீது சந்தேகம் கொண்டு படையினர் இவர்களைச் சுட்டதாகச் சொல்லப்படுகிறது.

இறந்தவர் காலி கரந்தெனியாவைச் சேர்ந்தவர். காயங்களுக்குள்ளானவர். பிரெஞ்சு நாட்டவர் என இனங்காணப்பட்டுள்ளது.

## யாழ். குடாநாட்டு சேவைக்கு புதிய கப்பல் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

'ஹபறண' என்ற கப்பல் அடுத்த மாதத்தில் இருந்து யாழ். குடாநாட்டிற்கான பொருட்களை ஏற்றும் சேவையில் ஈடுபடும்

இக்கப்பலில் 1950 மெற்றிக் தொன் எடையுள்ள பொருள்கள் ஏற்றமுடியும் என்றும் இக்கப்பல் றுகுணு கப்பலின் சேவை நிறுத்தப்பட உள்ளதால் இதற்கு பதிலாக சேவையில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

றுகுணு கப்பலில் 950 மெற்றிக் தொன் பொருட்களே ஏற்ற முடியும். றுகுணு கப்பல் இன்னும் ஒரு முறை மட்டுமே சேவையில் ஈடுபட உள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது (88)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது